Regeistered as a Newspaper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAN    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஐப்பசி 21    (06-11 93)    சனிக்கிழமை    ஓசை 261

## மோட்டார் ஊர்தி பரிசோதனை ஞாயிறன்று உட்படுத்தலாம்

கோண்டாவில் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் மோட்டார் ஊர்திகளை பதிவுசெய்து பரிசோதனைக்குட்படுத்தாதவர்கள் தங்கள் மோட்டார் ஊர்திகளை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணிதொடக்கம் மாலை 2. 00 மணிக்கு முன்னர், வடமராட்சியிலுள்ளவர்கள் மாலுசந்தி, உடுப்பிட்டி அவசர அனுமதி வழங்கும் அலுவலகத்திலும், தென்மராட்சியிலுள்ளவர்கள் சாவகச்சேரி அவசர அனுமதி வழங்கும் அலுவலகத்திலும் தங்கள் ஊர்திகளை பரிசோதனைக்கு உட்படுத்துமாறும், பரிசோதனைக்கு வரும் போது தத்தமது குடும்ப பதிவு அட்டையையும் மூல ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் எடுத்து வருமாறு மோட்டார் ஊர்திப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

# வடபகுதி ராணுவ முகாம்களை உசார் நிலையில் இருக்க உத்தரவு

## மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் தாக்கலாம்

(கொழும்பு)

வடபகுதியில் இருக்கும் இராணுவ முகாம்களை உசார் நிலையில் இருக்குமாறு இராணுவத்தலைமைப்பீடம் பணிப்புரை வழங்கியுள்ளது. இம்மாத இறுதியில் வரும் மாவீரர் வாரத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் இராணுவ முகாம்கள் மீது பாரிய தாக்குதல்களை நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுவதைத் தொடர்ந்து இப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக ''ஐலண்ட்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த மாவீரர் தினத்தில், பலாலி இராணுவ முகாமின் கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய பாரிய தாக்குதலில் 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதையும், பெருமளவு ஆயுத தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியதையும் தொடர்ந்தே இம்முறையும் அவ்வாறான பெரும் தாக்குதல் இடம்பெறலாம் எனப் பாதுகாப்பு வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு நகரிலும் பாதுகாப்பு விழிப்படையச் செய்யப்பட்டுள்ளதாகவும் வடக்கு கிழக்கிலிருந்து கொழும்பினுள் வருபவர்கள் கடும் சோதனைக்குள்ளாக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

## வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் தும்பங்கேணிப் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிகாலை 5-30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்து நடாத்திய தாக்குதலில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவரும், ஆதாவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை பரமகுமார் (தம்பிராசா சந்திரகுமார் தேற்றாத்தீவு 01 மட்டக்களப்பு) எனும் போராளிக்கும், பழுகாமத்தைச்சேர்ந்த குணம் ஆசிரியர் (வயது26) எனும் ஆதரவாளருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



வீரவேங்கை பரமகுமார்

## அதிகரித்த வட்டியினால் விவசாயிகள் அதிர்ச்சி

(நமது நிருபர்)

இலங்கை வங்கி விவசாயிகளுக்கான கடன் வழங்குதலில் ஏற்படுத்திய கட்டுப்பாடுகள் காரணமாக விவசாயிகள் பெரும்போக நெற் செய்கையில் ஈடுபட முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் பெரும்போக நெற் செய்கையும் பாதிப்படைந்துள்ளதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கியில் விவசாயக் கடன் பெறுவோர் முடபத்தாறு மாதங்களில் அவற்றை மீளளிப்புசெய்யவேண்டும்எனவும் பெறும் கடனுக்கு 21 வீதவட்டி செலுத்த வேண்டும் எனவும் விதிக்கப்பட்ட நிபந்தனைகளாலேயே விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இது தொடர்பாக விவசாயி ஒருவர் தெரிவிக்கையில்; இலங்கை வங்கியில் பத்தாயிரம் ரூபாவை விவசாயக் கடனாகப் பெற்று பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடலாம் என எண்ணியிருக்கிறேன். பொருளாதார நெருக்கடிமிக்க இன்றையநிலையில் இலங்கை வங்கியின் இத்தகைய நடவடிக்கைபெரும்அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுஇதனால் இம்முறை பெரும்போக செய்கையில ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்றார்.

## பாதுகாப்பு செலவினம் 2600 கோடியாக உயரும்

### விமல விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு போருக்கான அடுத்த வருட நிதி ஒதுக்கீடு 2000கோடி ரூபா எனவும் இது அப்பகுதியில ஏற்படும் உயிர்ச்சேதங்கள் புனர்வாழ்வு ஆகியவற்றின் செலவுகள் அதிகரிக்குமானால் 2600கோடி ரூபாவாக உயரலாம எனவும் பாராளுமன்ற விவகார திட்டமிடல் அமுலாக்கல் ராஜாங்க அமைச்சர் கலாநிதி விமல விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்தம் மூடிவடையுமானால் பாதுகாப்பிற்கு ஒதுக்கப்படும் நிதியில் 1500கோடி ரூபா குறையும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## இரண்டாம் கட்ட 'யாழ்தேவி' எப்போதென்று தெரியாது

### நளின் அங்கமன தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இரண்டாம் கட்ட யாழ்

வன்னி இராணுவ அதிகாரிகள் சமீபத்தில் புலிகளுக்கு எதிரான இரண்டாம் கட்ட

என்று கூறியுள்ளாரே எனக் கேட்ட போது அப்படியா என்றுசிரிப்புடன் அது குறித்து

## வெளிஓயாவில் குடியேற்றங்கள் நீடிக்கும் வரையில் போர் தொடரும்!

### வீ. பி. ஸிங்கின் கணிப்பீடு

(லண்டன்)

இஸ்ரேல் தான் ஆக்கிரமித்த பகுதிகளில் இஸ்ரேலிய பொதுமக்களை குடியேற்றியதோ அதே போல் வெளிஓயாவில்

யாழ்ப்பாணம் மீது நடந்த தாக்குதல் செய்தியாக இருக்கும் அப்படியில்லாவிட்டால் கொழும்பில் நடந்த தாக்குதல் செய்தியாக இருக்கும். ஆனால் வடக்கு - கிழக்கு

மானது இதில் சிங்களவரை குடியேற்றினால் தமிழரின் வடக்கு-கிழக்கு இணைந்த

யம்.

வெளிஓயாவில் விரிவாக்கப்பட் விவசாயத் திட்டம்

னதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக "ஐலண்ட்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த மாவீரர் தினத்தில், பலாலி இராணுவ முகாமின் கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய பாரிய தாக்குதலில் 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதையும், பெருமளவு ஆயுத தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியதையும் தொடர்ந்தே இம்முறையும் அவ்வாறான பெரும் தாக்குதல் இடம்பெறலாம் எனப் பாதுகாப்பு வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு நகரிலும் பாதுகாப்பு விழிப்படையச் செய்யப்பட்டுள்ளதாகவும் வடக்கு கிழக்கிலிருந்து கொழும்பினுள் வருபவர்கள் கடும் சோதனைக்குள்ளாக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

ராசா சந்திரகுமார் தேற்றாத்தீவு 01 மட்டக்களப்பு) எனும் போராளிக்கும், பழுகாமத்தைச்சேர்ந்த குணம் ஆசிரியர் (வயது26) எனும் ஆதரவாளருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



வீரவேங்கை
பரமகுமார்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு போருக்கான அடுத்த வருட நிதி ஒதுக்கீடு 2000கோடி ரூபா எனவும் இது அப்பகுதியில ஏற்படும் உயிர்ச்சேதங்கள் புனர்வாழ்வு ஆகியவற்றின் செலவுகள் அதிகரிக்குமானால் 2600கோடி ரூபாவாக உயரலாம எனவும் பாராளுமன்ற விவகார திட்டமிடல் அமுலாக்கல் ராஜாங்க அமைச்சர் கலாநிதி விமலவிக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்தம் மூடிவடையுமானால் பாதுகாப்பிற்கு ஒதுக்கப்படும் நிதியில் 1500கோடி ரூபா குறையும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# இரண்டாம் கட்ட 'யாழ்தேவி' எப்போதென்று தெரியாது

## நளின் அங்கமன தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இரண்டாம் கட்ட யாழ்தேவி இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என நடவடிக்கை தலைமை செயலக தேசிய பாதுகாப்பு பிரிவின் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

யாழ்தேவி நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் கூடிய விரைவில் மேற்கொள்ளப்படும் என வன்னிப் பகுதி இராணுவ அதிகாரிகள் வவுனியாவில் அண்மையில் கூறியது தொடர்பாக செய்தியாளர்கள் கேட்டபோதே பிரிகேடியர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

வன்னி இராணுவ அதிகாரிகள் சமீபத்தில் புலிகளுக்கு எதிரான இரண்டாம் கட்ட யாழ்தேவி நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளாரே எனக் கேட்டபோது அப்படியா என்றுசிரிப்புடன் அது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றார்.

## எழுதுவினைஞர் நியமனம்; பெயர்விபரம் வெளிவந்தது

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண அமைச்சு எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்கு மென யாழ். மாவட்டததில் கடந்த கால வன்செயல்களால் பாதிக்கப்பட்டோர் குடும்பங்களிலிருந்து தெரிவுசெய்துள்ள 60பேரதும் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி, ஊர்காவற்றுறை, வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்டோருக்கு எதிர்வரும 9ஆம் திகதியும் தெல்லிப்பழை, சங்கானை சண்டிலிப்பாய், சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்டோருக்கு 10 ஆம் திகதியும்

(03ஆம் பக்கம் பார்க்க)

# வெளிஓயாவில் குடியேற்றங்கள் நீடிக்கும் வரையில் போர் தொடரும்!

## பி. பி. ஸியின் கணிப்பு

(லண்டன்)

இஸ்ரேல் தான் ஆக்கிரமித்த பகுதிகளில் இஸ்ரேலிய பொது மக்களை குடியேற்றியதோ அதே போல் வெலிஓயாவில் சிங்களவரை சிறிலங்கா அரசு குடியேற்றுகிறது. மக்கள் சனத்தொகை விகிதாசாரத்தை மாற்ற இக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுகிறது வெலிஓயா குடியேற்றத் திட்டம் நீடிக்கும்வரை அப்பகுதியில் நடக்கும் போரும் நீடிக்கவே செய்யும். இவ்வாறு இலங்கையின் வடககு கிழக்கை பிரிக்க அரசு போடும் திட்டம் என்ற தலைப்பில் பீ.பி.ஸியின் முன்னாள் கொழும்பு செய்தியாளர் கிறிஸ்மொரீஸ் தனது ஆய்வுரையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் விபரிக்கையில்; இலங்கையில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் செய்தி தலைப்பாக வரும்போது அச்செய்தி ஒன்று யாழ்ப்பாணம் மீது நடந்த தாக்குதல் செய்தியாக இருக்கும் அப்படியில்லாவிட்டால் கொழும்பில் நடந்த தாக்குதல் செய்தியாக இருக்கும். ஆனால் வடக்கு - கிழக்கு எல்லை காட்டுப் பகுதியில் நடக்கும்போர் பற்றிய செய்தியாக அவை இருக்க மாட்டாது.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் அந்த கேந்திர இடத்தை சிங்களத்தில் வெலிஓயா என்றும் தமிழில் மணலாறு என்றும் அழைக்கின்றனர்.

வெலிஓயா பகுதி ஒடுக்கமானது இதில் சிங்களவரை குடியேற்றினால் தமிழரின் வடக்கு-கிழக்கு இணைந்த தாயக கோட்பாட்டை அரசியல், இராணுவ ரீதியில் முறியடித்துவிடலாம் என அரசு சதித்திட்டம் தீட்டியுள்ளது. இதையே அரசு தனது தந்திர உத்தியாக செயற்படுத்துகிறது. இனப்போரிற்கு அடிநிலை காரணமாக அமைந்துவிட்ட கசப்பான விவகாரங்களில் அரசே முன்னின்று இவ்வாறு சிங்களவரை குடியேற்றுவது வெறுப்பேற்றும் விடயம்.

வெலிஓயாவில் விரிவாக்கப்பட் விவசாயத்திட்டம் என்ற பெயரில் அங்கு குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு துப்பாக்கி ஏந்த அரசு நபருக்கு நாளொன்றிற்கு 50 ரூபா வழங்குகிறது. வெலிஓயாவை உண்மையில் ஒரு இராணுவ முகாம் என்றே கூறலாம். அங்கு நீர்ப்பாசன அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட 150 மிலியன் ரூபா இராணுவ வரவுசெலவு தொகை

(3ஆம் பக்கம் பார்க்க]

## வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு

# போராட்டம் நடத்த எதிர்க்கட்சிகள் தீர்மானம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு தொடர்ந்து அதிகரித்து வருவதைக் கண்டித்து முக்கியமான ஐந்து எதிர்க்கட்சிகள் எதிர்வரும் ஒன்பதாம் திகதியன்று போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் ஏற்கனவே இணைந்துள்ள கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி, தேசப்பிரேமி, ஜனதா வியாபாரய மற்றும் சிறிலங்கா மக்கள் கட்சி என்பவையே இந்தப் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ள கட்சிகளாகும். மேலும் மகாஜன எக்சத் பெரமுன எனப்படும் எம் ஈ பி. மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்பனவற்றுக்கும் இப் போராட்டத்தில் பங்குபற்றும்படி அழைப்பு விடப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக புதிய அனுமதிமுறை

# இனவிகிதாசாரம் பேணுவது பற்றி ஆராய அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதி முறையை ஆராய அமைக்கப்பட்டுள்ள புதிய குழு கடந்த 3ஆம் திகதி மாலை உயர் கல்வி அமைச்சரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

கஷ்டப்பிரதேசங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளவற்றிற்கு வெட்டுப்புள்ளிகளை தீர்மானிக்கும்போது சலுகைகள் வழங்கப்படுகின்றன. இவை இன்னமும் கஷ்டப் பிரதேசங்களாக இருக்கின்றனவா? என்பதை நீங்கள் ஆராயவேண்டும் என உயர் கல்வி அமைச்சர் அத்தநாயக இச் சந்திப்பின்போது இக்குழுவினரிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும் அரசாங்க சேவைக்கு ஆட்களை திரட்டும்போது இப்போது இனவிகிதாசாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை தெரிவுசெய்யும் விடயத்திலும் இன விகிதாசார முறையை கடைப்பிடிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை நீங்கள் தீவிரமாக பரிசீலிக்க வேண்டும் என்றும் அமைச்சர் அச் சந்திப்பின்போது தெரிவித்தார்.

டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் சிபார்சை சமர்ப்பிக்க வேண்டும். இதன் படி 1993 ஓகஸ்ட் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கே புதிய சிபார்சுகள் அடங்கிய முறையை கடைப்பிடிக்கலாம் எனவும் அச் சந்திப்பின்போது அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் இந்த குழுவினர் பல்கலைக்கழக அனுமதி குறித்து ஆலோசனைகளை பொதுமக்களிடம்

(3ஆம் பக்கம் பார்க்க]

காற்றுக்கு கைவிலங்கு போடுவதில்லை
நிலவை சிறையில் போடுவதில்லை
**ஈழத் தமிழனே!**
உனக்கு மட்டும் ஏன் அடிமைவாழ்வு
நினைத்துப்பார்த்து நெஞ்சை நிமிர்த்து

## இன்று படகுச்சேவை

**ஊரி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.**

# 16,000 இந்திய படையினர் இலங்கையில் பலியாயினர்

## அமைச்சரவை ரகசியமாம்

(கொழும்பு)

"வடக்கு கிழககில் இந்திய இராணுவத்தினர் தங்கியிருந்த குறுகிய காலத்தில் சுமார் பதினாறாயிரம் இந்தியத் துருப்புக்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் கொல்லப்பட்டுள்ளனர்." இவ்வாறு மத்திய மாகாண ஆளுநர் பி.சி. இம்புலான தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நீண்ட காலமாகப் பாதுகாக்கப்பட்ட அமைச்சரவை இரகசியம் இது என்றும் முதன் முறையாக தான் இந்த இரகசியத்தை வெளியிடுவதாகவும் கூறியுள்ளார்

தற்பொழுது விடுதலைப் புலிகள் சிறிலங்கா இராணுவத்தினரை தொகை வகையின்றிக் கொன்று குவிக்கின்றனர் இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கையில் தொடர்ந்தும் தங்கியிருந்தால் எமது படையினர் இவ்வாறு பெருமளவில் கொல்லப்படுவது தவிர்க்கப்பட்டிருக்கும் என்றம் அவர் மேலும தெரிவித்துள்ளார்

## வரி விளம்பரம்

### ஆண்டு 9 கணக்கியல்

கனிட்ட தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சைக்கான பயிற்சி நூல் குறுவினா விடை கணக்கியல் பயிற்சிக் கணக்குகள், கடந்த கால (1992) வினா விடைகள். ஆக்கம் த. தர்மராஜன். (சி 7844)

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷசன் நாய்க்குட்டிகள் (42 நாட்கள்) விற்பனைக்குண்டு- தொடர்பு; இலக்கம்.15. சீனியர் ஒழுங்கை கலட்டி, யாழ்ப்பாணம்.
(6485)

### றெவி முத்துக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி (யாழ். தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6490)

### ஆண்டு 4 வினாத்தாள்

1994 புலமைப் பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளியிடப்படும் தொடர் பரீட்சை வினாத்தாளின் 15 ஆவது வினாத்தாள் 6-11-1993 சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு வெளியிடப்படும். வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம். எடிசன் அக்கடமி- யாழ் இந்து அருகில் கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[6498]

### ஆயுர்வேத வைத்திய நிலையம் திறப்பு

(வடமராட்சி)

சாவகச்சேரி வீதி கலிகைப் பகுதியில் புதிதாக ஆயுர்வேத வைத்தியசாலை நிலையம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந் நிலையத்தை கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீனிவாசன் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்
(யோ)

### எறிகணை வீச்சு

(சுன்னாகம்)

நேற்று முன்தினம் இரவு 8. 30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து வலி வடக்குப் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடை...

---

தமிழீழ காவல் துறையினருக்கு

### நன்றிகள்

விடத்தற் பளையைச் சேர்ந்த இராமநாதன் தம்பையா ஆகிய எனது யமகா 50 மோட்டார் சைக்கிளை 20-9-93 அன்று சாவகச்சேரி சிவன்கோயிலடியில் எனது மாமியார் வீட்டில் விடப்பட்டபோது களவாடப்பட்டது. பின்னர் தமிழீழ காவல்துறையினர் எனது மோட்டார் சைக்கிளை மீட்டுத் தந்தமைக்காக அவர்களுக்கு எனது மனமுவர்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவா ஸ்ரோஸ் இ. தம்பையா
இல-12, மாக்கற்.

[சி-7853]

---

## இலவச பற்சிகிச்சை
## (FREE DENTAL SERVICE)

தமிழீழ மக்களின் நலன் கருதி பின்வரும் தினங்களில் எமது வைத்தியசாலையில் இலவச பற்சிகிச்சை அளிக்கப்படும்.

**07-11-1993] ஞாயிற்றுக்கிழமை**
**14-11-1993] காலை 8.30 மணிமுதல்**
**நண்பகல் 12.00 மணிவரை**

"எம் கடன் பணி செய்வதே"

**வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை**

William Harvey Private Hospital


No. 17, Kandy Road,
Chunddikuli,
JAFFNA.

இல: 17, கண்டி வீதி,
சுண்டிக்குளி
யாழ்ப்பாணம்
(6497)

---

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கத்தின் ஆதரவில்

## நிதியுதவிக் காட்சியாக



---

## "நினைவழியா நாட்கள்" நாளை வெளியிடப்படும்

(யாழ்ப்பாணம்).

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'நினைவழியா நாட்கள்' கவிதைநூல் வெளியீட்டு விழா நாளை மாலை நான்கு மணியளவில் நல்லூர் இளங் கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இவ் விழாவினை வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகள் மற்றும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கவுள்ளனர். இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கத்தின் தமிழ் வாழ்த்தை யடுத்துகலை, பண்பாட்டுக்கழகத் துணைப் பொறுப்பாளர் சி. சேரலாதனின் வரவேற்புரையும், தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த வே. பாலகுமாரனின் வெளியீட்டுரையும் இடம்பெறும். தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் நூலை வெளியிட்டு வைக்க, பண்டிதர் வீ. பரந்தாமன், கவிஞர் சோ. பத்மநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரின் மதிப்பீட்டுரையும் நூலாசிரியரின் பதிலுரையும் இடம்பெறும். தமிழிசை அரங்கு வெளியீட்டு விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறவுள்ளது.

## 17,000 ரூபா சம்பளம்

(கொழும்பு)

ராஜாங்க அமைச்சர்களுக்கு மாதாமாதம் வழங்கப்படும் படி 17,000 ரூபாவாக உயர்த்தப்பட வுள்ளது. செப்ரம்பர் 22ஆம் திகதி முதல் செயற்படும் படியாக இந்தப் படி உயர்வு வழங்கப்படும்.

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவரின் படியும் உயர்த்தப் படவுள்ளது. இந்த மாற்றம் ஜனவரி 1, 1993 முதல் வழங்கப்படும் என்று பொது நிர்வாகச் சுற்றறிக்கை ஒன்று கூறுகிறது.

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் சம்பளமும் உயர்த்தப்பட்டு ஜனவரி 1, 1993 முதல் வழங்கப்படும். புதிய சம்பளத்திட்டம் வருமாறு: ரூபா 1,35,000—8X7,800 ரூபா 1,98,000.

### சுகாதார கருத்தரங்கு

[நமது நிருபர்]

சுகாதாரகருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கரணவாய் கல்லுகம் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சுகாதார கல்வி போதனாசிரியர்களும் இப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரியும் கலந்து கொள்கின்றனர். (ச,சி)

### திருட்டு முயற்சி முறியடிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியிலுள்ள மோட்டார் ...

---

## சோமகலாவல்லி சண்முகலிங்கம் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி

நாம் பழகிய அந்த நாட்கள்

ஆத்ம சாந்தி பிரார்த்தனை நாளன்று சிவபதமடைந்த தங்களுடன் நாம் பழகிய நாட்கள் எம் நெஞ்சைவிட்டு என்றும் நீங்காதவை. உங்கள் பிரிவால் பெருந்துயரில் வாடும் உங்கள் கணவருக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

செனறல் நர்சிங்ஹோம்
[ஊழியர்கள்]

(6500)

---

## 31-ம் நாள் நினைவுப் பூக்கள்



மலர்வு
7-8-1944

மறைவு
7-10-1993

### மயில்வாகனம் குணபாலசிங்கம்

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட எம அன்புத்
தெய்வத்தை ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்தித்து நிற்கும்

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

ஜயாவத்தை,
அல்வாய் வடக்கு (6484)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



### ஆயுர்வேத வைத்திய நிலையம் திறப்பு

(வடமராட்சி)

சாவகச்சேரி வீதி கலிகைப் பகுதியில் புதிதாக ஆயுர்வேத வைத்தியசாலை நிலையம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந் நிலையத்தை கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீனிவாசன் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். (யோ)

### எறிகணை வீச்சு

(சுன்னாகம்)


நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து வலி வடக்குப் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடைபெற்றது. எறிகணைகள் தெல்லிப்பளை, அளவெட்டிப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன அளவெட்டி வயற் பிரதேசங்களில் வீழ்ந்தஎறிகணைகள் சில வெடிக்கவில்லை எனவும் தெரிய வருகிறது.

இதேவேளை இராணுவ காவலரண்களிலிருந்து துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது (11)

### பிற்போடப்பட்டது

6/7.11.93 நடைபெற விருந்ததொலைக்கல்விசயன் முறைப் பரீட்சை அனைத்தும் 14/21.11.93ல்-ஞாயிறு, சனிக்கிழமைகளில் நடைபெறும் என தொலைக்கல்வி இணைப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராசா தெரிவித்துள்ளார்.

## நிதியுதவிக் காட்சியாக



**காலம்: 06-11-1993 சனிக்கிழமை**
**நேரம்: மாலை 6.00 மணி**
**இடம்: சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானம்**

பருத்திநகர் சாண்டோ எம். துரைரத்தினத்தின்
வீரதீரச் செயல்கள்

- நெருப்புப் புதைகுழியில் சில மணிநேரம் படுத்திருத்தல்.
- இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
- 35 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டினை 7' உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்.
- மோட்டார் சைக்கிளை வாயால் தூக்குதல்.
- பாரங்கொண்ட கல்லை மார்பின்மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
- 3'' 200 ஆணி அடிக்கப்பட்ட படுக்கை மீது படுக்க வைத்து மார்பின் மேலாகப் பாரம் உடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்.
- பொலிகை சிவா அண்ணா நடாத்தும் தீச்சுடர் சிலம்படி நிகழ்ச்சி.

எனவே அனைத்து மக்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

**உங்கள் ஆதரவிற்கு நன்றி.**

(5069) **சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம்**

முதல் வழங்கப்படும். புதிய சம்பளத்திட்டம் வருமாறு: ரூபா 1,35,000—8X7,800 ரூபா 1,98,000.

### சுகாதார கருத்தரங்கு

[நமது நிருபர்]

சுகாதாரகருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கரணவாய் கல்லுகம் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சுகாதார கல்வி போதனாசிரியர்களும் இப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரியும் கலந்து கொள்கின்றனர். (ச,சி)

### திருட்டு முயற்சி முறியடிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியிலுள்ள மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்விற்பனை நிலையம் ஒன்றில் மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் வாங்குவதற்குவந்த நபர் ஒருவர் கடை உரிமையாளரிடம் 2000/- பெறுமதியான பொருள்களை வேண்டி விட்டு பணத்தினை ஒப்படைக்காது தப்பிக்கமுயன்றபோது பொதுமக்களால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி காவல் துறை பணிமனையில் ஒப்படைக்கப்பட்டார்

இருபாலையைச்சேர்ந்தஆறுமுகதாஸ் சந்திரமோகன் என்பவரே இவ்தந்திரமான திருட்டில் ஈடுபட்டவராவார் இவரால் வாங்கப்பட்ட பொருள்கள் யாவும் மீட்கப்பட்டது' இவர் தற்போது காவல்துறையின் பாதுகாப்பில் உள்ளார் இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (86)

### விண்ணப்பம் கோரப்பட்டது

[கொழும்பு]

கல்வியியல் கல்லூரிகள் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த [உயர்தரம்] பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் மூன்று பாடங்களிலும் 170 முதல் 200 வரை மொத்தப் புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும்.

ஆரம்பக் கல்வி, உடற்கல்வி விஞ்ஞானம், ஆங்கிலம், மனைப்பொருளியல் ஆகிய கற்கை நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் அனுப்பும் கடைசித் திகதி நவம்பர் 10-ம் திகதியாகும்.

மொத்தம் பதினொரு கல்வியியல் கல்லூரிகள் தென்பகுதியில் இயங்குகின்றன. கடைசியாக வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட கல்வியியல் கல்லூரியில் தமிழும், சிங்களமும் போதனா மொழிகளாக உள்ளன.

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



### கப்டன் நிரேஷ்

(குலவீரசிங்கம் தேவபாலன்)
[தேவன்]

**தாயின் மடியில்:** 1972-09-16 **தாயக மண்ணில்:** 1993-09-23

**திதி: 1993 - 11 - 06**

பாடுபட்டு நாம் வளர்க்க நீ நிமிர்ந்தாய்!
வீடுவிட்டு விடுதலைக்காய் நீ விரைந்தாய்!
சூடுபோட்டு சிங்களத்தை ஓடவைத்தாய்... இன்றெமை
வாடவிட்டு எங்குதேவா நீ மறைந்தாய்.....

இன்று எமதில்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வில் உற்றார், உறவினர்கள், போராளிகள், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை. (சி-7820)

நின்பிரிவால் துயருறும்
-குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம் ... 1993-11-06

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் சாம்பல் தீவுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் குமார்/அத்தான்** (செல்வநயினார் தயானந்தரூபன் - திரியாய் - திருமலை)

**ஜெரோம்** (சரவணமுத்து குகதாசன் - கைதடி, நுணாவில் - யாழ்)

1988ஆம் ஆண்டு கிளிநொச்சி, உமையாள்புரம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**வேதா/பவுண்** (தில்லையம்பலம் துரைராஜசிங்கம் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

1990ஆம் ஆண்டு வீமன்காமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். சுஜி** (பொன்னுத்துரை நாகஜீவா - வட்டக்கண்டல் - மன்னார்)

**மதன்** (ராயப்பு அகஸ்ரின் சதீஸ்குமார் - புலோப்பளை கிழக்கு - பளை)

சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட மட்டு - ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு வாசியான தமிழர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்,

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-7855)


நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்!

- சிற்றிசன் கஸியோ கைக்கடிகாரங்கள்
- வீடியோ ஓடியோ செற் மற்றும் பிலிம்றோல்கள்
- கசற்றேடியோ, வீடியோடெக், கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள்
- ஒறிஜினல் மக்ஸல் மணிக்கூட்டு பற்றறிகள்
- புரட்சி பாடல்கள் தத்துவப்பாடல்களை தரமான முறையில் பதிவு செய்பவர்கள்

மற்றும்

உங்கள் எலக்றோனிக் பொருள்களை கொள்வனவு செய்பவர்கள்

கைக்கடிகாரங்கள் மற்றும் றேடியோ, கசற்செற், டெக், ரீவிக்களை
உத்தரவாதத்துடன் திருத்தி கொடுப்பவர்கள்

தொடர்புகளுக்கு:

**★——மின்வளம்——★**

**இல. 81, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7843)

### சிந்தனைக்கு

குத்தீட்டிகளைக் கொண்டு மனிதன் தனக்கோர் அரியணையை அமைத்துக் கொள்ளக் கூடும். ஆனால், அதன் மேல் அமர அவனால் முடியாது

— கமிலோ, தெ. கவூர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05


## ஏன் இந்த பெருமிதம்

மனிதர்கள் தம் செயல் குறித்து பெருமைப்பட்டுக் கொள்வதற்கும், விடயங்கள் உண்டு. மக்களுக்காக அரிய சேவைகள் செய்தவர்கள் அது பற்றித் திருப்திப்பட்டுக் கொள்ளலாம். அவரின் சேவைகள் பற்றி மற்றவர்கள் அவருக்கு புகழாரம் சூட்டலாம். அதில் சேவை புரிந்தவர் பெருமிதமும் கொள்ளலாம். ஆனால் ஒரு இனத்தை ஒடுக்குபவர்களும், இனப்படுகொலை புரிபவர்களும் ஒரு போதும் தமது நடவடிக்கை குறித்து பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது.

ஆனால், சிறீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அண்மையில் 'பயங்கரவாதத்தை' ஒழிப்பதில் சிறிலங்கா முன்மாதிரியாக இருக்கின்றது. உலகநாடுகள் சிறிலங்காவின் முன்மாதிரியைப் பின்பற்றுவதாகவும் பெருமைப்பட்டுக்கொண்டார். அதாவது, தமது முதுகில் தாமே தட்டிக் கொண்டார் என்பதே பொருத்தமானதாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் இத்தற்பெருமை பேசும் புராணமானது. ஜேர்மனியின் ஹிட்லரும், உகண்டாவின் இடிஅமினும், கம்பூச்சியாவின் பொல்பொட் அரசும் பேசிக் கொண்டதிற்கு நிகரானதே ஆகும் அதாவது ஜேர்மனியில் பல லட்சம் யூதர்களைக் கொன்றொழித்த ஹிட்லரின் உலக கலாசாரத்தை அழிப்பவர்களை ஒழிப்பதாகப் பெருமை பேசிக் கொண்டார், உகண்டா இடி அமீன் உகண்டா ஆபிரிக்கர்களுக்கு மட்டுமானதே என ஆசியர்களை விரட்டியதையிட்டு பெருமைப்பட்டுக் கொண்டார். மேலும் அரசியல் எதிரிகளை சம்மட்டியால் அடித்துக் கொலை செய்வதை செலவு குறைவான மரண தண்டனை என சிக்கனம் பற்றியும் பிரஸ்தாபித்தார். இதேவேளை, கம்போடியாவில் பொல்பொட் அரசோ களை எடுப்பு என்ற ரீதியில் நூற்றுக்கணக்கானவர்களை ஒரே குழியில் புதைத்து சாதனை நிலை நாட்டியதன் மூலம் பெருமைப்பட்டு கொண்டது.

மனித குலத்திற்கு இவ்வாறான அழிவைச் செய்தவர்கள் இவர்கள் யாவரும் தமது செயலுக்கு விளக்கமும் கூறிக்கொண்டதோடு, அதற்காகப் பெருமையும் பட்டுக் கொண்டவர்கள் தான். ஆனால் இதனை உலகம் ஏற்றதா என்றால் அதுதான் இல்லை. அவர்கள் புரிந்த இனப்படுகொலைக்கும், அழிப்பு நடவடிக்கைக்கும் உலகம் அவர்கள் மீது குற்றம் சாட்டத்தவறவில்லை. கண்டிக்கவும் தவறவில்லை. இவர்கள் யாவருமே தண்டிக்கப்பட்டார்கள்.

# எதிர்க்கட்சி ஆட்சி மாகாணங்கள் தேசிய பாடசாலை உருவாக்க தடை

எதிர்க் கட்சிகளிடம் உள்ள மாகாணசபைகளில் தேசிய பாடசாலைகள் அமைவதை நிறுத்துமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் வி. ஜே. மு லொக்குபண்டார தெரிவித்துள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் ''யுக்திய'' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இதன்படி தென்மாகாணம், மேல்மாகாணம், வடமேல்மாகாணங்களில் தேசிய பாடசாலைகள் அமைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் 500 பாடசாலைகளை தரம் உயர்த்துமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்திருந்ததை தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிக எண்ணிக்கையானவை, மேல்மாகாணம் வடமேல்மாகாணம் தென்மாகாணத்தை சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## குழந்தைகளை தத்தெடுக்க 1439 விண்ணப்பங்கள்

**— திணைக்கள தலைவர் தகவல்**

(கொழும்பு)

சிறிலங்காவின் குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதற்கு வெளிநாடுகளில் இருந்து 1439 விண்ணப்பங்கள் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு கிடைத்திருப்பதாக திணைக்கள தலைவர் பத்மா ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இருந்த போதும் இவ்வருடம் குழந்தைகள் வழங்குதல் ஓர் ஆயிரமாக வரையறை செய்திருப்பதாகவும் குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பது தொடர்பாக வெள்ளை இனத்தினர் இடம் இருந்தே அதிகளவு விண்ணப்பங்கள் வந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து, பிரான்ஸ், சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளிலேயே இதற்கு பாரிய அளவு கிராக்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைதூதுவர்கள் மூலம் இக்குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வருட முடிவுக்குள் மீண்டும் குடியமர்த்த விசேட திட்டம்

(கொழும்பு)

இந்த வருடம் முடிவதற்கு முன்னர் மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் உள்ள 13.017 குடும்பங்களை மீண்டும் பழைய இடங்களில் குடியேற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக புனர் வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்கள் தமது வீடுகளை திருத்துவதற்காக ஐந்து ஆயிரம் ரூபா வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை கிழக்கு மாகாணத்திலுள்ள சகல இடம்பெயர்ந்த முகாம்களையும் இந்த வருடம் முடியுமுன்னர் மூடிவிடுவதற்கு எடுத்த தீர்மானத்தை அதற்கான பணம் கிடைக்காமையினால் தொடர்ந்து அந்த முகாம்கள் இயங்குவதாக புனர்வாழ்வு அமைச்சு தெரிவிக்கின்றது.

நிதி பற்றாக்குறையினால் 17, 800 குடும்பங்கள் மட்டுமே கிழக்கு மாகாணத்தில் மீண்டும் குடியேற்றப் பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விதை உருளைக்கிழங்கு இம்முறை வரவில்லை

யாழ். மாவட்டத்திற்கான விதை உருளைக்கிழங்கு அடுத்து வரும் 'ருகுணு' கப்பலில் எடுத்து வரப்படவுள்ளது. நேற்று பருத்தித் துறைக்கு வந்த இக் கப்பலில் விதை உருளைக்கிழங்கு வந்து சேரவில்லை.

மேலும் இக்கப்பலில் 3211 மண்ணெண்ணெய் பரல்களும் நவம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்களும் பிறப்புப் பதிவுப் புத்தகங்கள் சிலவும் வந்தன. மண்ணெண்ணெய் பரல்கள் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமாகின. அதே சமயம் 'வாதுவ' கப்பலில் இருந்தும் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

(யோ)

## யாழ். செயலகத்தில் நேர்முகப் பரீட்சைகள்

(நமது நிருபர்)

கொழும்புக்கு மத்திய அரசினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட எழுது வினைஞர் மற்றும் அதனுடன் மற்றும் கணக்குப்பதிவாளர், சிறாப்பர், புகையிரத நிலைய அதிபர், களஞ்சியப் பொறுப்பாளர் ஆங்கிலம் தமிழ் தட்டெழுத்தாளர் ஆகியோருக்

## ஹட்சன் சமரசிங்கா எம்.பி நீதிமன்றத்தில் ஆஜரானார்

(கொழும்பு)

இருதார விவாக குற்றத்திற்காகக் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹட்சன் சமரசிங்கா ஹல்ஸ்ரவ் நீதிமன்றம் இலக்கம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

முதல் மனைவியிடமிருந்து விவாகரத்து பெறாமல் இவர் மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஹட்சன் சமரசிங்கா, 1968 இல் பத்மினி பெரேரா என்ற பெண்ணைக் கண்டியில் திருமணம் செய்தார். இது இப்படியிருக்க, இவர் கொழும்புக் கச்சேரியில் 1985 தில்னா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார் என்று குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தென்னைமர உரத்திற்கு விலை நிர்ணயம்

(நமது நிருபர்)

தென்னை மரங்களுக்கு இடுவதற்கான ஏ. பி. எம். உரத்திற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற விவசாய உப குழுக் கூட்டத்திலேயே இவ் உரத்திற்கான விலை நிர்ணயிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி 50கிலோ நிறையுடைய ஏ. பி. எம் உரம் 592 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தேவையானோர் புலோலி, அம்பன், சாவகச்சேரி, உடுவில், தொல்புரம், நல்லூர் பகுதிகளில் உள்ள கமநல சேவை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இதனைப் பெற சிரமங்களை எதிர் நோக்குவோர் அந்தந்தப் பகுதி பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

(ச, சி)

## தையல் கண்காட்சியும் விளையாட்டு விழாவும்

(வடமராட்சி)

அல்வாய் மெதடிஸ்ற் திருச்சபை நல்லாயன் சிறுவர் பாடசாலையில் இன்று சனிக்கிழமை அருட்திரு எஸ். எஸ். ஞானராசா தலைமையில்

## யாழ். பல்கலை விஞ்ஞான பீடத்தில் கணனி இலத்திரனியல் கண்காட்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து தனியார் கணனி கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கணனி இலத்திரனியல் கண்காட்சி ஒன்றை எதிர்வரும் புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் நடத்தவுள்ளது. இந்தக் கண்காட்சியில் கணனி இலத்திரனியல் பற்றிய அறிமுகத்துடன், கணனியின் பகுதிகள், அடிப்படைத் தத்துவங்கள், கணனி இலத்திரனியல் தொழில்நுட்பம், கணனியின் வரலாறு, கணனியின் வெவ்வேறு பிரயோகங்கள் கணனியின் விந்தைகள், சிறுவர்களுக்கான கணனி விளையாட்டுக்கள் என்பனபோன்ற பல்வேறு அம்சங்கள் இடம் பெறவுள்ளன.

இக் கண்காட்சியை பார்வையிடச் செல்வதற்கான போக்குவரத்து தொடர்பாக விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவை சங்கங்களின் இணையத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விசேட சேவைகளைப் பெற விரும்புவோர் அவ்வப் பகுதியிலுள்ள சிற்றூர்தி சேவைச் சங்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## ஒத்திவைப்பு

புலிகளின் குரல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாதாந்தம் முதலாவது சனிக்கிழமைகளில் நடைபெறும் கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் சந்திப்பு இன்று நடைபெறமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலர் பாடசாலை ஆசிரியருக்கு பயிற்சி

யாழ் மாநகரசபை எல்லைக்குள் பணிபுரியும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கு கட்டம் கட்டமாக பயிற்சி நெறிகளை நடாத்துவதற்கு மாநகர சபை ஆணையாளர் திரு. பாலசிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்பயிற்சி நெறியில் சனசமூக நிலையங்களில் பணிபுரிவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

## வெட்டுப்புள்ளியினால் பாதிப்பு பாதிக்கப்பட்ட மாணவர் கடிதம்

[யாழ்ப்பாணம்]

1992-93ஆம் கல்வி ஆண்டிற்கான வெட்டுப்புள்ளிகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு மேலதிக அனுமதிகள் வழங்கப்படும் நிலையில் ஒரு மாணவருக்கு இரு அனுமதிகள் வழங்கப்படலாமென கருதப்படுவதால் வேறொரு மாணவர் சந்தர்ப்பத்தை இழக்கும் நிலை வரலாமென்றும், இவ்வாறாக வெற்றிடங்கள் ஏற்படுமிடத்து அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை பெரிதும் பாதிக்கும் என்றும் வெட்டுப்புள்ளியினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் ஒன்றியம் யாழ். பல்கலைக்கழக பதிவாளருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது. இக்கடிதத்தில் மேலும் 1992 ஆகஸ்ட் உயர்தரப் பரீட்சையில் பாதிக்கப்பட்ட மாணவர்களில் பெரும்பாலானோரும் தோற்றிப் பெறுபேறுகளை பெற்றுள்ளனர். 93-94 கல்வியாண்டு அனுமதியைத் தீர்மானிப்பதற்கான முதலாவது விண்ணப்பப்படிவங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கோரியிருக்கிறது. 93-94 கல்வியாண்டிற்கான வெட்டுப்புள்ளித் தீர்மானத்தில் இவர்களும் உள்ளடக்கப்படவுள்ளனர். எனவே 92-93ஆம் கல்வியாண்டிற்கான வெட்டுப்புள்ளிகளில் மாற்றம் ஏற்பட்டு மேலதிக அனுமதிகள் வழங்கப்படும் நிலையில் மேற்கண்ட பிரச்சினைகள் ஏற்படலாம். என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

## கட்டாக்காலி நாய்களை

ஜேர்மனியில் பல லட்சம் யூதர்களைக் கொன்றொழித்த ஹிட்லரின் உலக கலாசாரத்தை அழிப்பவர்களை ஒழிப்பதாகப் பெருமை பேசிக் கொண்டார், உகண்டா இடிஅமீன் உகண்டா ஆபிரிக்கர்களுக்கு மட்டுமானதே என ஆசியர்களை விரட்டியதையிட்டு பெருமைப்பட்டுக் கொண்டார். மேலும் அரசியல் எதிரிகளை சம்மட்டியால் அடித்துக் கொலை செய்வதை செலவு குறைவான மரண தண்டனை என சிக்கனம் பற்றியும் பிரஸ்தாபித்தார். இதேவேளை, கம்போடியாவில் பொல்பொட் அரசோ களை எடுப்பு என்ற ரீதியில் நூற்றுக்கணக்கானவர்களை ஒரே குழியில் புதைத்து சாதனை நிலை நாட்டியதன் மூலம் பெருமைப்பட்டு கொண்டது.

மனித குலத்திற்கு இவ்வாறான அழிவைச் செய்தவர்கள் இவர்கள் யாவரும் தமது செயலுக்கு விளக்கமும் கூறிக்கொண்டதோடு, அதற்காகப் பெருமையும் பட்டுக் கொண்டவர்கள் தான். ஆனால் இதனை உலகம் ஏற்றதா என்றால் அதுதான் இல்லை. அவர்கள் புரிந்த இனப்படு கொலைக்கும், அழிப்பு நடவடிக்கைக்கும் உலகம் அவர்கள் மீது குற்றம் சாட்டத்தவறவில்லை. கண்டிக்கவும் தவறவில்லை. இவர்கள் யாவருமே தண்டிக்கப்பட்டார்கள்.

இந்நிலையில் தான், சிறிலங்காவும் இன்று உள்ளது. உலக மனிதஉரிமை ஸ்தாபனங்களின் கணிப்பீட்டின்படி மனித உரிமைகளை மீறும் நாடுகளின் வரிசையில் சிறீலங்கா முன்னணியில் உள்ளது. அரசபடைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பெரிதும் கண்டனத்திற்குள்ளாகியுள்ளன. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனத் தொடர்ச்சியாக வற்புறுத்தப் பட்டும் வருகின்றது.

ஆனால், சிறிலங்கா அரசு இதனைப் பொருட்படுத்துவதாக இல்லை. தொடர்ந்தும் மனித உரிமைகளை மீறியவாறே உள்ளது. தொடர்ந்தும் இனப்படுகொலையும், இன ஒடுக்குதலையும் மேற்கொள்வதாகவே உள்ளது. அது குறித்து தற்பொழுது பெருமைப் படவும் தொடங்கியுள்ளது.

தமிழ் மக்களை தனது பிரஜைகள் எனக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம், அண்மையில் தமிழர்கள் என்ற காரணத்திற்காக மட்டுமே ஆயிரக்கணக்கானவர்களைக் கைதுசெய்துள்ளது. சிறையில் அடைத்துள்ளது. கைதுகள் எங்கும் எப்பொழுதும் இடம் பெறலாம் என்ற நிலையை உருவாக்கியுள்ளது. வீட்டில் உறங்கும் போதும் சரி, பஸ்ஸில், ரயில் வண்டியில் பயணம் செய்யும் போதும் சரி, வீதியில் நடமாடும் போதும் சரி எப்பொழுதும் இக்கைதுகள் இடம் பெறலாம்.

அதாவது, ஒரு இனமக்களை அதன் இன அடையாளத்தைக் கொண்டு மட்டும் அழித்தொழிக்கவும், சிறையில் தள்ளவும் சிறிலங்கா முயற்சிக்கின்றது. இந்நிலையானது 20ஆம் நூற்றாண்டின் இறுதி தசாப்தத்தில் பிரதமர் ரணில் கூறுவது போல் ஒரு முன்மாதிரிதான். ஆனால், பின்பற்றக் கூடியது அல்ல. ஆனால் மனித இனத்தின் மீதான கொடூரத்திற்கு உதாரணமாகலாம்.

சிலவேளை, சிறிலங்கா பிரதமர் கூறுவது போல், சில நாடுகளுக்கு இவர்கள் முன்மாதிரியாக இருக்கலாம். அதாவது, இன ஒடுக்கலை மேற்கொள்வது எவ்வாறு என தென்னாபிரிக்கா இதுவரை வகித்துவந்த தலைமைப் பாத்திரத்தை சிறிலங்கா பெற்றுக் கொள்ளலாம். அதற்கான தகுதியும் அவர்களுக்கு நிறையவே உண்டு. ஆனால் ஒரு இனத்தின் உரிமைகளைப் பேண வேண்டும். உலகில் உள்ள மனிதர்கள் யாவரும் சமனானவர்களாக நடத்தப்பட வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனை கொண்ட மனிதர்கள் எவருக்கும் சிறிலங்கா எப்பொழுதும் முன்மாதிரியாக இருக்கப்போவதில்லை. உலகில் காட்டுமிராண்டித்தனம் மறைந்து பல தசாப்தங்கள் சென்று விட்டன.

# விதை உருளைக்கிழங்கு இம்முறை வரவில்லை

யாழ். மாவட்டத்திற்கான விதை உருளைக்கிழங்கு அடுத்து வரும் 'ருகுணு' கப்பலில் எடுத்து வரப்படவுள்ளது. நேற்று பருத்தித்துறைக்கு வந்த இக் கப்பலில் விதை உருளைக்கிழங்கு வந்து சேரவில்லை.

மேலும் இக்கப்பலில் 3211 மண்ணெண்ணெய் பரல்களும் நவம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்களும் பிறப்புப் பதிவுப் புத்தகங்கள் சிலவும் வந்தன. மண்ணெண்ணெய் பரல்கள் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமாகின. அதே சமயம் 'வாதுவ' கப்பலில் இருந்தும் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

(யோ)

...ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தேவையானோர் புலோலி, அம்பன், சாவகச்சேரி, உடுவில், தொல்புரம், நல்லூர் பகுதிகளில் உள்ள கமநல சேவை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இதனைப் பெற சிரமங்களை எதிர்நோக்குவோர் அந்தந்தப் பகுதி பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

(ச, சி)

# யாழ். செயலகத்தில் நேர்முகப் பரீட்சைகள்

(நமது நிருபர்)

கொழும்புக்கு மத்திய அரசினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட எழுது வினைஞர் மற்றும் அதனுடன் இணைந்த சேவையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை திட்டமிட்டபடி இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் யாழ் செயலக மேலதிக அரச அதிபர் அறையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பொது எழுது வினைஞர்களுக்கும் நாளை தபால், அச்சக, நீதிச்சேவை, புகையிரத சேவை, ஆஸ்பத்திரி எழுதுவினைஞர்களுக்கும் மற்றும் கணக்குப்பதிவாளர், சிறாப்பர், புகையிரத நிலைய அதிபர், களஞ்சியப் பொறுப்பாளர் ஆங்கிலம் தமிழ் தட்டெழுத்தாளர் ஆகியோருக்கும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்கு வருவோர் உரிய மூல ஆவணங்களையும் நேர்முகப் பரீட்சைக்கான கடிதத்தின் முதற்பக்க இரு போட்டோ பிரதியுட்பட அக்கடிதமூலம் கேட்கப்பட்ட எல்லா ஆவணங்களினதும் இரு போட்டோ பிரதிகளையும் கொண்டுவரல் வேண்டும் என யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

# தையல் கண்காட்சியும் விளையாட்டு விழாவும்

(வடமராட்சி)

அல்வாய் மெதடிஸ்ற் திருச்சபை நல்லாயன் சிறுவர் பாடசாலையில் இன்று சனிக்கிழமை அருட்திரு எஸ். எஸ். ஞானராசா தலைமையில் விளையாட்டு விழாவும் தையல் பயிற்சி நிலைய கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளன.

காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை கண்காட்சியும் பிற்பகல் 2.00 மணிக்கு விளையாட்டு விழாவும் நடைபெறும். வடமராட்சிவிவாகப் பதிவாளர் திரு.சி.குலசிங்கம் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

(யோ)

[யாழ்ப்பாணம்]

1992-93ஆம் கல்வி ஆண்டிற்கான வெட்டுப்புள்ளிகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு மேலதிக அனுமதிகள் வழங்கப்படும் நிலையில் ஒரு மாணவருக்கு இரு அனுமதிகள் வழங்கப்படலாமென கருதப்படுவதால் வேறொரு மாணவர் சந்தர்ப்பத்தை இழக்கும் நிலை வரலாமென்றும், இவ்வாறாக வெற்றிடங்கள் ஏற்படுமிடத்து அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை பெரிதும் பாதிக்கும் என்றும் வெட்டுப்புள்ளியினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் ஒன்றியம் யாழ். பல்கலைக்கழக பதிவாளருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது. இக்கடிதத்தில் மேலும் 1992 ஆகஸ்ட் உயர்தரப் பரீட்சையில் பாதிக்கப்பட்ட மாணவர்களில் பெரும்பாலானோரும் தோற்றிப் பெறுபேறுகளை பெற்றுள்ளனர். 93-94 கல்வியாண்டு அனுமதியைத் தீர்மானிப்பதற்கான முதலாவது விண்ணப்பப்படிவங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கோரியிருக்கிறது. 93-94 கல்வியாண்டிற்கான வெட்டுப்புள்ளித் தீர்மானத்தில் இவர்களும் உள்ளடக்கப்படவுள்ளனர். எனவே 92-93ஆம் கல்வியாண்டிற்கான வெட்டுப்புள்ளிகளில் மாற்றம் ஏற்பட்டு மேலதிக அனுமதிகள் வழங்கப்படும் நிலையில் மேற்கண்ட பிரச்சினைகள் ஏற்படலாம். என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

# கட்டாக்காலி நாய்களை பிடிக்கும் வேலை ஆரம்பம்

[நமதுநிருபர்]

மானிப்பாய் பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

போதிய வசதி இன்மையால் நாய்களை அடித்துக் கொலை செய்யவென முன்னர் எடுத்த நடவடிக்கைக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து அத்திட்டம் கைவிடப்பட்டது தெரிந்ததே.

தற்போது பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் கட்டாக்காலி நாய்களை பிடித்து குளத்து நீருள் அமிழ்த்திகொன்றபின் புதைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ச). (சி)

# பரீட்சை நடைபெறும்

கூட்டுறவு பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் இன்றுவந்து சேரும் எனவும் எனவே பரீட்சை முன்னர் குறிப்பிட்டபடி இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் எனவும் யாழ்ப்பாணம் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் துரை தியாகராசா அறிவித்துள்ளார்.

எழுதுவினைஞர்

உடுவில், கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்டோருக்கு 11ஆம் திகதியும் யாழ். செயலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இவ்வாறுதெரிவான 60பேர்களது பெயர் விபரங்கள் வருமாறு:

ஏ. சாந்தகுமாரி பருத்தித்துறை, கே. சிவானந்தன் வல்வெட்டித்துறை, யு.கௌரி பருத்தித்துறை, ஏ. ஆனந்தராஜா அல்வாய், பி. பாலவதனன் பருத்தித்துறை, ரி. சிவபாதசுந்தரம் வல்வெட்டித்துறை, எஸ். கலைச்செல்வி புலோலி, எஸ். நளினி பருத்தித்துறை, ஆர். இந்துமதி பருத்தித்துறை, ஆர். ராஜசிலன் அல்வாய், என். ஜீவா வல்வெட்டித்துறை, பி. கல்யாணி பருத்தித்துறை, கே. நந்தினி அல்வாய், வி. புவனராணி பருத்தித்துறை, ரி. புஸ்பவதி தாளையடி, ஆர். வர்ணகுமார் கரவெட்டி, என். மகாலட்சுமி காரைநகர், ஜே. அன்ரன் ஜெயக்குமார் ஊர்காவற்றுறை, கே. எஸ். நகுலேஸ்வரி காரைநகர், ரி. சந்திரிகா ஊர்காவற்றுறை, கே. உதயமாலா வேலணை, என்.கோமதி வேலணை, எஸ். ராஜரட்ணம் தெல்லிப்பழை, கே. கணபதிப்பிள்ளை அளவெட்டி, எஸ். அமலஜெயராணி கே. கே. எஸ்., கே. கருணாவதி தெல்லிப்பழை, பி. கமலேஸ்வரி கே. கே. எஸ், கே. சீதா தெல்லிப்பழை, வி. கலைகுமரன் தெல்லிப்பழை, கே. அமுதினி அளவெட்டி, கே. காந்தபவானி சித்தன்கேணி, என். தவநாயகி சுழிபுரம், என். யோகாம்பிகை சுழிபுரம், என். கோபாலகிருஸ்ணன் சுழிபுரம், ஆர். தயாளினி பண்டத்தரிப்பு, கே.ஞானேந்திரி சாவகச்சேரி, கே. புவனேந்திரா மிருசுவில், ரி. மலரரசி கைதடி, எஸ். சிறிதரன் எழுதுமட்டுவாள், எஸ். லம்போதரஜோதி கைதடி, என். சிவகுமாரன் இணுவில், ஆர். ரஜனி சுன்னாகம், ஆர். சத்தியவாணி அச்சுவேலி, கே. கே. பிறேமலா அச்சுவேலி, பி. சுதன் நீர்வேலி, எஸ். சுந்தரராஜா கோப்பாய், என். குகானந்தி கொழும்புத்துறை, எஸ். மனோகரா சுண்டிக்குளி, பி. நேசமலர் அத்தியடி, எஸ். அனற்சகிலா சுண்டிக்குளி, எஸ். அன்ரன் ரவிராஜா யாழ்ப்பாணம், எஸ். மோகனமூர்த்தி கொழும்புத்துறை, ரி. சுவேந்திரராஜா நல்லூர், கே. வரதலட்சுமி யாழ்ப்பாணம், கே. நமசிவாயம் கொக்குவில், என். ரஜனி யாழ்ப்பாணம், எம். சுகந்தன் திருநெல்வேலி, பி. வித்தியா நல்லூர்.

# புலிகளின் புரட்சி இசைவிழா ஜேர்மனியில் இசைத்தட்டு

'புலிகளின் புரட்சி இசை விழா' எனும் பாடல் தொகுதி கொம்பக்ற் டிஸ்க் எனும் நவீன இசைத்தட்டில் ஜேர்மனியில் வெளியிடப்பட்டுள்ளது. இது தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக ஜேர்மனி கிளையினால் வெளியிடப்பட்டது.

ஜேர்மனியில் வசிக்கும் இசையமைப்பாளர் கண்ணனின் இசையமைப்பில் 14 பாடல்கள் இந்த இசைத் தட்டில் உள்ளன. முகில்வாணன் சுரேந்தி அமுதநதி, சுதர்சன் ஆகியோர் பாடல்களை இயற்றியுள்ளனர். கண்ணன், கலாநாயகி, சூரியகுமார், உதயன், ஜெகதா, அனுரா, சோபா, அமுதா புலேந்திரன், ஜேசுதாஸ் ஆகியோர் பாடல்களை பாடியுள்ளனர்.

பாடல்கள் ஜேர்மனியில் உள்ள தமிழீழம் ஒலியகத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டவையாகும்.

இனவிகிதா

கோரியுள்ளனர். பொதுமக்கள் தம் ஆலோசனைகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், பல்கலைக்கழக பிரவேச மீளாய்வுக்குழு, பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

# உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட போட்டிகளில் மாவட்ட நிலையில் இன்று பின்வரும்அணிகள் மோதுகின்றன. பரியோவான் கல்லூரியில் நடைபெறும் இப் போட்டிகளில் 19வயதுப் பிரிவில் உரும்பராய் இந்து எதிர் உடுப்பிட்டி அ. மி. க., 17வயதுப் பிரிவில் புனித சாள்ஸ் ம. வி. எதிர் உடுப்பிட்டி அ. மி. க. என்பன மோதும்.

★

தென்மராட்சி தீவக வலயங்கட்குட்பட்ட பதிவு செய்த கழகங்கட்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்று மாலை மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் பி. ப 3. 00 மணிக்கு மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சாவகச்சேரி சிறிதாஸ் வி, கழகத்தை எதிர்த்து மரிக்கார் வி. கழகமும் 4 00 மணிக்கு நடைபெறும் இறுதிப் போட்டியில் புங்குடுதீவு அம்பாள் வி, கழகத்தை எதிர்த்து நாவற்குழி வி, கழகமும் விளையாடவுள்ளன.

வெலிஓயாவில்

யில் சேர்ப்பதே சரியாகும். அங்கு எந்த நீர்ப்பாசன திட்டமும் ஆரம்பிக்கப்படவில்லை. அங்குள்ள சிங்களக் குடியேற்றவாசிகள் மனிதக் கேடயங்களே என்றும் தெரிவித்தார்.

மேலும் 1983இல் நடைபெற்ற இனக்கலகத்தின் 10 ஆண்டு நிறைவு நாளையொட்டி தாக்குவதற்கு ஓர் இலக்காக தமிழர்கள் வெலிஓயாவில் ஜனகபுர முகாமை தெரிவுசெய்ததில் வியப்பில்லை.

இப்போரில் இந்த ஜனகபுர முகாம் அழிக்கப்பட்டது பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது. தமிழர்களின் தாயகமாக உருவாக்க விழையும் ஈழத்திற்கு அடிப்படையான ஒன்றை அழிக்க இலங்கை அரசு தீட்டிய பெரும் திட்டத்தின் மையத்தில் வீழ்ந்த சம்மட்டியடி ஜனகபுர இராணுவ முகாம் வீழ்ச்சி என கிறிஸ் மொறிஸ் குறிப்பிட்டுள்ளார்.

## Jaffna Medical Association

### Annual General Meeting - 1993

Annual General Meeting of the above association will be held on 20th Nov. '93 ( Saturday ) at 12 Noon in the clinical Lecture Hall, General Hospital, Jaffna. Please be present.

GENERAL HOSPITAL, JAFFNA. — Dr. A. Kailainathan, Hony. Secretary

(6502)


## மாருதி வீடியோ விசனின் புதிய வெளியீடுகள்

1) காவல்துறை- நாகர்ஜுன்-ஷோபனா
2) ராஜேந்திரன் கஜேந்திரன்- ராஜேந்திரராவ் சௌந்தர்யா
3) அக்கரை சீமையிலே

என்றென்றும் தரமான பிரதிகளுக்கு

### மாருதி வீடியோ விசன்

பரமேஸ்வராச் சந்தி திருநெல்வேலி

[6506]


## தட்டெழுத்தாளர் (பெண்) தோட்டப்பணியாளர் (ஆண்) பதவி வெற்றிடங்கள்

- தமிழ், ஆங்கிலத்தில் தட்டச்சுப் பயிற்சியுள்ள பெண் தட்டெழுத்தாளர் தேவை. எமது அலுவலக முகவரியில் இருந்து 2மைல் சுற்றாடலில் விண்ணப்பதாரி வதிவதும், க. பொ. த. உயர்தர வகுப்பில் உயிரியல் விஞ்ஞானம் பயின்றிருப்பதும் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.
- தோட்டப்பணியாளர் 25வயதிற்கு மேற்படாதிருப்பின் விரும்பத்தக்கது.
- 9. 11. 93 காலை 9.00 மணியிலிருந்து 12.00 மணிக்கிடையில் நேரில் சமுகமளிக்கவும்.

**நங்கூரம்**
சமூக அறிவியல் ஏடு
அரசடி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

(சி-7863)

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

## பொது அறிவுப் போட்டிப் பரீட்சை 1993

06-11-93இல் நடைபெற இருந்தமேற்படி பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளது

பரீட்சை நடைபெறும் திகதி விரைவில் அறிவிக்கப்படும்

தலைவர்
உ. த ப. இ

(6501)

## குண்டென நினைத்தபோது பெட்டியில் குழந்தை இருந்தது

### அநுராதபுரம் ரயிலில் சம்பவம்

(கொழும்பு)

ரஜரட்டரஜனி கடுகதி ரயிலில் இருந்த பெட்டியில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து பலத்த பாதுகாப்பின் மத்தியில் அதிகாரிகள் பெட்டியை திறந்தபோது அதனுள் உயிருடன் குழந்தை ஒன்றுகாணப்பட்டது. இச் சம்பவம் கடந்த சனியன்று அநுராதபுரத்தில் நடைபெற்றது

அநுராதபுரத்தில் ரயில் நிறுத்தப்பட்டு, பயணிகள் இறக்கப்பட்டு ரயில் கடும் சோதனைக்குள்ளானது. அப்போது ரயிலில் ஒரு சிறு கடதாசிப்பெட்டி காணப்பட்டது அதிகாரிகள் உசாரானார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இதையடுத்து அக் கடதாசிப்பெட்டி திறக்கப்பட்டபோது அதனுள் உயிருடன் ஒரு சிசு காணப்பட்டது. இச் சிசு தற்போது அடையாளம்காண அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## சிப்பாய் பலி

(கொழும்பு)

ஆனையிறவு இயக்கச்சி இராணுவ முகாமில் ஒரு கோப்ரலுக்கும் சிப்பாய்க்கும் இடம்பெற்ற கேலி உரையாடல் இறுதியில் கொலையில் முடிவடைந்தது.

ஆத்திரமுற்ற சிப்பாய் துப்பாக்கியால் கோப்ரலை நோக்கிச் சுட்டதில் ஹேமச்சந்திரா என்ற கோப்ரல் ஸ்தலத்திலேயே பலியானார்.

## திகிலிவெட்டைப் பகுதியில் 10 தமிழ் இளைஞர் கைது

மட்டக்களப்பு மாவட்டம் திகிலிவெட்டை, இலுப்பையடி பகுதிகள் அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டு அங்குள்ள அப்பாவி தமிழ் மக்கள் சந்தேகத்தின் பேரில் தொடர்ந்து கைது செய்யப்படுகின்றனர்.

கடந்த புதன்கிழமை மேற்படி பகுதிகளை சுற்றிவளைத்த இராணுவத்தினர் பத்து இளைஞர்களை கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

## புலிகள் கொல்வார்கள் என நான் கூறவில்லை

கருணாநிதி

(பம்பாய்)

விடுதலைப் புலிகள் என்னைக் கொல்வார்கள் என்று நான் சொல்லவில்லை, விடுதலைப் புலிகளுக்கும் எனக்கும் எதுவித விரோதமும் கிடையாது.

இவ்வாறு தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி பம்பாயிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அப்பேட்டியில்-

நான் எவ்வளவோ பொறுமையாக இருக்கிறேன், ஆனால், வை. கோபாலசாமி தான் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி அளவுக்கதிகமாகப் பேசி வருகிறார். இதைவிட அவர் என்னையே கொன்றிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

1983, 1984ஆம் ஆண்டுகளில் அ. தி. மு. கவைப்போல தி. மு. கவும் தமிழீழக் கோரிக்கையை வற்புறுத்தியது. ஆனால் இலங்கையில் தமிழீழக் குழுக்களுக்கிடையில் சண்டை ஏற்பட்டதால் நாங்கள் எங்கள் நிலையை மாற்றிக் கொண்டோம்.

வை. கோபாலசாமி சதி செய்தார் என்று நான் கூறவில்லை. தமிழக அரசு எனக்கு அனுப்பிய கடிதத்தை பத்திரிகை நிருபரிடம் காட்டினேன். அந்தக் கடிதம் பற்றி நான் எந்த விமர்சனமும் செய்யவில்லை.

வை, கோபாலசாமி தான் மீண்டும் மீண்டும் இப்பிரச்சினையை கிளறிக் கொண்டிருக்கிறார். அவர் தனது நிழலுடன் போராடிக்கொண்டிருக்கிறார். அதற்கு நான் எப்படி என்ன செய்ய முடியும்? அதற்கு நான் எப்படி பொறுப்பேற்க முடியும், என்று அவர் அப்பேட்டியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## உள் வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள் 05-11-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11521

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-8823, 28-9186, 27-7043, 41-4194, 27-9492
26-4726, 28 4367, 41-7693, 28-3735, 24-9674
24 5396, 41 5015, 26 3068, 24-8631, 28:1730
41-7865, 26-6527, 27-7081, 26-7390, 27-8515

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-0763, 26-9658, 41-9530, 26-3812, 24 6941
26-7560.

## பூப்பந்தாட்டம்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாத் தொடர்பாக நடைபெறும் போட்டிகளில் ஆசிரியர்களுக்கான பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளைஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

ஆலங்கேணி பகுதியில் அநாதரவான நிலையில் கிடந்த கைப்பை ஒன்று யாழ் பல்கலைக்கழக மன்னார் மாவட்ட மாணவர் ஒன்றியத்தினரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## விரைவில் வவுச்சர்

இம்மாதத்திற்கான ஒய்வூதிய வவுச்சர்கள் நேற்றைய தினம் யாழ் செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

றுகுண கப்பல்மூலம் கொண்டுவரப்பட்ட இவ் வவுச்சர்கள் செயலக அதிகாரியால் கப்பலிலிருந்து செயலகத்திற்கு எடுத்து,வரப்பட்டது. இது விரைவில் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ச, சி)

தேர்தலை முன்னிட்டு

## குடும்ப விபரங்களை பதிய பொலிசார் வற்புறுத்து

(மட்டக்களப்பு)

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட இருப்பதை முன்னிட்டு வாழைச்சேனை வாசிகள் தமது குடும்ப அங்கத்தவர் விபரங்களைபதிவுசெய்யும்படி பொலிசார் உத்தரவிட்டுள்ளனர்.

இதனை அடுத்து வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் காலை முதல் மாலை வரை மக்கள் குழுமி நிற்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கல்குடா பகுதி வாசிகளும் இவ்வாறு பதிய வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

## தபால் சேர்க்கவும்

இன்று காலை 9 30 மணிக்கு முன்பாக தபால்களை பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு பிரதம தபால் அதிபர் கேட்டுள்ளார்.

## அநுரா [illegible] ஏற்பு

இம்மாதம் ஒன்பதாம் திகதி திரு அநுரா பண்டாரநாயக்கா சத்தியப்பிரமாணம் செய்து பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றுக்கொள்ளுவார் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


மாபெரும் கைப்பணிக் கண்காட்சியும்

## மலிவு விற்பனையும்

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மகளிர் அமைப்பின் கைவண்ணத்தில் உருவான பனை ஓலை கைப்பணிப் பொருட்களும், அலங்காரவேலைப்பாடுகளுடனான தையற் பொருட்களும் காட்சிப்படுத்தப்படுவதோடு, மலிவு விலையில் விற்பனையும் செய்யப்படும்.

**கண்காட்சி:- 06-11-93, 07-11-93 (சனி, ஞாயிறு)**
**மலிவு விற்பனை:- 07-11-93**
**இடம்:- சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்**
**நேரம்: மு. ப. 10-00 மணி முதல் பி. ப. 5-00 வரை**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகிகள்,
பனை. தெ. வ. அ. கூ. சங்கம்.
சாவகச்சேரி.

(6499)


## மரண அறிவித்தல்கள்

### திரு. சுப்பையா சிவபாதசுந்தரம் (இராசா)

திரு. சுப்பையா சிவபாதசுந்தரம் (இராசா) காலமாகிவிட்டார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அரசடி வீதி,
திருநெல்வேலி, கிழக்கு.

தகவல்;
எஸ். சுந்தரலிங்கம்

(6503)

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு

கிடையில் நேரில் சமுகமளிக்கவும்.

**நங்கூரம்**

சமூக அறிவியல் ஏடு
அரசடி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

(சி-7863)

---

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

## பொது அறிவுப் போட்டிப் பரீட்சை 1993

06-11-93இல் நடைபெற இருந்தமேற்படி பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளது

பரீட்சை நடைபெறும் திகதி விரைவில் அறிவிக்கப் படும்

தலைவர்
உ. த ப. இ

(6501)

---

## யாழ் மிட்-ரவுண்

**றோட்ராறக்ற் கழகம் நடாத்தும்**

**'உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி'**

முதல்நாள் ஆட்டம்

**இடம்:-** பல்கலைக்கழக மருத்துவபீட மைதானம்
**காலம்:-** 06.11.1993 இன்று மாலை 3 மணி

சென்றீக்லெஸ் எதிர் ஜங்கென்றீஸ்
சென்மேரீஸ் எதிர் ஞானமுருகன்

(9414)

---

## முதல்வருடநினைவில்ரி,பி.

### அமரர் ரி. பி, பத்மநாதன்

அவர்கள்

10-02-1934 முதல் 06-11-1992 வரை

உதைபந்தே உலகமென்று
உன் வாழ்வை உரமாக்கி
ஓராண்டு தூரத்துள்
உருண்டு மறைந்தனையோ!
உன் திறனால் உயர்ந்தவர்கள்
உன் நினைவை மறந்தாலும்
உன் உழைப்பால் உயிர்பெற்று
உன் நினைவில் உருகும் நாம்
உனை என்றும் மறப்போமா!

**கிறாஸ்கொப்பேர்ஸ்**
தெல்லிப்பழை

(சி7862)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

தில் உருவான பனை ஓலை கைப்பணிப் பொருட்களும், அலங்காரவேலைப்பாடுகளுடனான தையற் பொருட்களும் காட்சிப்படுத்தப்படுவதோடு, மலிவு விலையில் விற்பனையும் செய்யப்படும்.

**கண்காட்சி:-** 06-11-93, 07-11-93 (சனி, ஞாயிறு)
**மலிவு விற்பனை:-** 07-11-93
**இடம்:-** சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்
**நேரம்:** மு. ப. 10-00 மணி முதல் பி. ப. 5-00 வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகிகள்,
பனை. தெ. வ. அ. கூ. சங்கம்.
சாவகச்சேரி.

(6499)

---

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

### கணனி கல்வி நிலையங்களுடன் இணைந்து நடாத்தும்

### "கணனி இலத்திரனியல் கண்காட்சி"

- கணனி இலத்திரனியல் பற்றிய அறிமுகம்
- கணனியின் பிரயோகங்கள்
- கணனியின் விந்தைகள்
- சிறுவர்களுக்கான கணனி விளையாட்டுக்கள்
- இலத்திரனியல் கணனி தொழில் நுட்பம்

**பங்குபற்றும் நிறுவனங்கள்:**

- யாழ். பல்கலைக்கழகம்
- தொழில் நுட்பக்கல்லூரி – வட்டுக்கோட்டை
- கணனி விஞ்ஞான கல்வி நிலையம் –[C. S, A.]
- வணிக முகாமைத்துவ கல்லூரி
- யுனிக்கோ கல்வி நிறுவனம்
- வட இலங்கை தொழில்நுட்ப நிறுவனம்
- பற்றீசியன் இன்ஸ்ரிரியூற்

**இடம்:** யாழ். பல்கலைக்கழகம்

**காலம்:** 1993 நவம்பர் 10-ம், 11-ம், 12-ம் திகதிகளில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

**பிரவேசம்:** ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(சி 7857)

---

கின்றனர்.

## விரைவில் வவுச்சர்

இம்மாதத்திற்கான ஒய்வூதிய வவுச்சர்கள் நேற்றைய தினம் யாழ் செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

ருகுண கப்பல்மூலம் கொண்டுவரப்பட்ட இவ் வவுச்சர்கள் செயலக அதிகாரியால் கப்பலிலிருந்து செயலகத்திற்கு எடுத்து,வரப்பட்டது. இது விரைவில் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ச, சி)

---

தம தபாலகத்தில் சேர்க்குமாறு பிரதம தபால் அதிபர் கேட்டுள்ளார்.

ளுவார் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

# மரண அறிவித்தல்கள்

## திரு. சுப்பையா சிவபாதசுந்தரம் (இராசா)

திரு. சுப்பையா சிவபாதசுந்தரம் (இராசா) காலமாகிவிட்டார்.
இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
எஸ். சுந்தரலிங்கம்

அரசடி வீதி,
திருநெல்வேலி, கிழக்கு.

(6503)

---

## திருமதி சோமகலாவல்லி சண்முகலிங்கம்

(போஷகர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை)

டாக்டர் சோ. சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவி சோமகலாவல்லி சண்முகலிங்கம் 02.11.93 அன்று காலமானார். அன்னார் கொடிகாமம் காலஞ்சென்ற திரு. திருமதி பேரம்பலம் செல்லையா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற திரு. செ. சோமசேகரம், திருமதி. இராசம்மா சோமசேகரம் அவர்களின் மருமகளும், சோமேஸ் விக்கினராஜ், நாகநந்தினி,செல்வலட்சுமி ஆகியோரின் தாயாரும், கல்யாணி, குணராஜ், ஞானப்பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,வள்ளி, மதுமிதா, கீர்த்தனா ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று சனிக்கிழமை (06.11 93) மு.ப. 10.30 மணிக்கு நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்திற்கு பூதவுடல் தகனம் செய்யப்படுவதற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் யாவரையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

தகவல்.
டாக்டர் சோ. சண்முகலிங்கம்
கணவன்

180A நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(6495)

---

## சுப்பன் கந்தசாமி

(முன்னாள் இ.போ.ச. சாரதி கோண்டாவில்)

4/7 3ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த சுப்பன் கந்தசாமி நேற்று காலமானார். இவர் கலாதேவியின் அன்புக் கணவரும், பிரேமலதா, சியாம், தாரணி, தர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பன்-மாணரியம் அவர்களின் அன்பு மகனும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (06.11.93) அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. மகேந்திரன்
(மைத்துனர்)

(6507)